முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2023 யூலை

## (203) வணிகச் சட்டம்

(Business Law)

2023-08-19
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

# பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல.* **1.1** *தொடக்கம்* **1.6** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக..*

**1.1** கடற்படை நிர்வாகக் குழு (admiralty) சார்ந்த பிரச்சினைகள் மீதான ஆரம்ப நியாயாதிக்கத்தை கொண்டுள்ள நீதிமன்றம் எது?

(1) உயர் நீதிமன்றம் (Supreme Court).
(2) மேல் நீதிமன்றம் (High Court).
(3) மாவட்ட நீதிமன்றம்.
(4) நீதிவான் நீதிமன்றம்.

**1.2** இலங்கையிலுள்ள சட்ட முறைமை தொடர்பில் கீழ்வருவனவற்றுள் சரியான கூற்று **அல்லாதது** எது?

(1) இலங்கையிலுள்ள சட்டத்தின் உச்ச மூலம் (supreme source) அரசியலமைப்பு ஆகும்.
(2) கண்டியச் சட்டம் என்பது ஒரு பிராந்திய அடித்தளத்துடன்கூடிய தனிப்பட்ட ஒரு சட்டம் ஆகும்.
(3) இலங்கையின் மீள்நிரப்புச் (residuary) சட்டம் என்பது ஆங்கிலச் சட்டமாகும்.
(4) இலங்கையிலுள்ள பொதுச் சட்டமானது ரோமன் டச்சுச் சட்டம் ஆகும்.

**1.3** கீழ்வருவனவற்றுள் உயர் நீதிமன்றத்தின் ஒரு அதிகாரம் **அல்லாதது** எது?

(1) அடிப்படை உரிமைகள் மீதான நியாயாதிக்கம்.

(2) இறுதியும் முடிவுமான சிவில் மற்றும் குற்றவியல் மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.

(3) பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுவது தொடர்பான நியாயாதிக்கம்.

(4) ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றின் நிலுவைத் தொகைகளை வசூலித்தல்.

**1.4** சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய கீழ்வரும் கூற்றுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

**(a)** காப்புறுதிச் சான்றிதழ் என்பது CIF உடன்படிக்கை ஒன்றில் கொள்வனவாளரால் விற்பனை யாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒரு ஆவணமாகும்.

**(b)** நாணயக் கடிதம் என்பது சர்வதேச வர்த்தகத்தில் கொடுப்பனவுகளைச் செய்யப் பயன்படுத்தப் படும் ஒரு முறை ஆகும்.

**(c)** மத்தியஸ்தம் (mediation) என்பது நீதித்துறை அல்லாத பிணக்குத் தீர்க்கும் ஒரு முறை ஆகும்.

மேலுள்ளவற்றுள், சர்வதேச வர்த்தகம் தொடர்பில் சரியான கூற்றுகளைத் தெரிவு செய்க:

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.5** மாற்றுண்டியலின் புறக்குறிப்பு ஒன்றிற்கான கீழ்வரும் உதாரணம் உங்களுக்குத் தரப்பட்டுள்ளது:

ஏ. சமன் குமார

உண்டியலின் மேற்படி புறக்குறிப்பு:

(1) வெற்றுப் புறக்குறிப்பு. (2) விசேட புறக்குறிப்பு.

(3) கட்டுப்படுத்தப்பட்ட புறக்குறிப்பு. (4) நிபந்தனை புறக்குறிப்பு.

**1.6** கீழ்வருவனவற்றுள் வாடிக்கையாளர் ஒருவரால் கட்டளையிடப்பட்ட காசோலை ஒன்றிற்கு கொடுப்பனவை மறுப்பதற்கான/ நிராகரிப்பதற்கான வலு / அதிகாரத்தை வங்கி கொண்டிருக்கும் சந்தர்ப்பமாக அமைவது எது?

(1) வாடிக்கையாளரின் மரண அறிவிப்பு. (2) காசோலை பிற்தேதியிடப்பட்டிருக்கும்போது.

(3) காசோலை காலாவதியாகியிருக்கும்போது. (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 12 புள்ளிகள்)

*இல. **1.7** தொடக்கம் **1.9** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.7** பொருள்கள் இயற்கையில் அழிவடையும் தன்மையைக் கொண்டிருக்கும்போது பொருள்களை மீள் விற்பனை செய்வதற்கு விலை செலுத்தாத விற்பனையாளர் (unpaid seller) அனுமதிக்கப்படுகிறார்.

**1.8** கப்பற் செலவற்ற (FOB) ஓர் உடன்படிக்கையின்படி, உடன்படிக்கை மூலம் ஒப்புக் கொள்ளப்பட்ட சேருமிடத்தில் பொருள்களை விநியோகிப்பதற்கான போக்குவரத்து உடன்படிக்கை ஒன்றினுள் நுழைவதற்கு விற்பனையாளர் பொறுப்புடையவராக இருக்கிறார்.

**1.9** 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதிப் பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டத்தின் ஒரு நோக்கமானது பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்வதைத் தடுப்பதும் அத்தகைய நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதும் ஆகும். (01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*இல. **1.10** தொடக்கம் **1.14** வரையான வினாக்களுக்கான குறுகிய விடைகளை, உங்களுடைய விடைப் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதவும்.*

**1.10** மாற்றுண்டியல் கட்டளைச் சட்டத்தின்படி, மாற்றுண்டியலை உரிய நேரத்தில் வைத்திருப்பவரின் இரண்டு (02) உரிமைகளைக் குறிப்பிடுக.

**1.11** வார்நாமம் (Bill of Lading) ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய இரண்டு (02) விடயங்களைக் குறிப்படுக.

**1.12** "கைமாறத்தகாத சாதனங்கள்" இற்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

**1.13** விற்பனை ஒப்பந்தமொன்றில் பிரதிபலனைத் (விலையைத்) தீர்மானிக்கக்கூடிய இரண்டு (02) முறைகளைக் குறிப்பிடுக.

**1.14** பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், "பொருள்கள்" இற்கு எதிரான இரண்டு (02) பரிகாரங்களைக் (remedies) குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(புள்ளிகள் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

**வசந்தன்** என்பவர் அவரது பணியிடத்தில் தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறார். **வசந்தன் வரையறுக்கப்பட்ட XYZ காப்புறுதிக் கம்பனியில்** ஆயுள் காப்புறுதி ஒன்றிற்கு விண்ணப்பித்திருந்தார். மருத்துவப் பரிசோதனையின்போது, கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆஸ்துமா (ஈளை) நோய்க்காக வைத்திய நிபுணரிடம் ஏதாவது ஆலோசனை பெற்றுள்ளீர்களா என அவரிடம் கேட்கப்பட்டது. இதற்கு **வசந்தன்** "இல்லை" எனப் பதிலளித்திருந்தார். எவ்வாறாயினும், அவர் ஆஸ்துமா நோய்க்காக ஒரு வைத்தியரை அணுகியிருந்ததுடன் நிரந்தரப் பயன்பாட்டிற்காக இரண்டு உள்ளிழுப்பான் (இன்ஹேலர்) கருவிகளும் அவருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தன. காப்புறுதியைப் பெற்றுக் கொண்ட பின்னர், **வசந்தனின்** தொழிற்சங்கம் ஒழுங்குசெய்த மாபெரும் போராட்டத்தில், கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டதால் **வசந்தன்** மிகவும் பாதிக்கப்பட்டதுடன், கண்ணீர்புகைப் பாதிப்பு மற்றும் ஆஸ்துமா காரணமாக அவரது நுரையீரலில் ஏற்பட்ட கடுமையான பாதிப்பால் அவர் இறக்க நேரிட்டது. அவரது பிரேதப் பரிசோதனையில், அவரது இறப்புக்கான காரணம், அவரது பலவீனமான நுரையீரலின் ஏற்பட்ட ஆஸ்துமா என கண்டறியப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **வரையறுக்கப்பட்ட XYZ காப்புறுதிக் கம்பனியிடமிருந்து** பெற்றுக்கொள்ளப்பட்ட ஆயுள் காப்புறுதியின் கீழ், **வசந்தனின்** மனைவி நட்டஈட்டைக் கோர முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஒரு காப்புறுதி உடன்படிக்கையின் இரண்டு (02) தரப்பினர்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**ரோஸி** என்பவர் 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 60,000/- சம்பளத்தில் ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியில் பணிக்குச் சேர்ந்துள்ளார். அவர் கம்பனியின் ஓர் ஊழியர் என்ற வகையில், ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) மற்றும் ஊழியர் சேமலாப நிதி (EPF) ஆகியவற்றுக்கு அவர் உரித்துடையவராவார். அவர் வெளிநாடொன்றிற்கு நிரந்தரமாகக் குடிபெயர்வதற்காக 2023 ஏப்ரல் 30 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தனது இராஜினாமா (பணியிலிருந்து விலகும்) கடிதத்தை வழங்கியுள்ளார். அவரது இறுதி மாதச் சம்பளம் ரூபா 200,000/- ஆக இருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) பணியிலிருந்து விலகும் நேரத்தில் **ரோஸியின்** பணிக்கொடை உரித்தினைக் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) **ரோஸி** EPF இனை பெற்றுக்கொள்வதற்கான அவரது உரிமை பற்றி **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ETF சட்டத்தின் மூன்று (03) பிரதான தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**சுரேஷ்** என்பவர் 2019 இல் ''நல்ல நண்பன்'' என்று தலைப்பிட்டு, ஒரு புத்தகத்தை எழுதியிருந்ததுடன் புத்தகத்திற்கான காப்புரிமையையும் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் அந்தப் புத்தகத்தை மொழிபெயர்ப்புச் செய்வதற்கான அதிகாரத்தை **நிமல்** என்பவருக்கு வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், **சுரேஷ்** 2020 இல் காலமானார். புத்தகத்தின் மொழிபெயர்ப்பு முடிவடைந்ததன் பின்னர், **நிமல்** அந்தப் புத்தகத்திற்கு வேறு தலைப்பு ஒன்றினை இட்டு, தனது புத்தகமாக வெளியிட்டார். **சுரேஷின்** மனைவி **நிமலுக்கு** எதிராக சட்ட நடவடிக்கையை எடுப்பதற்குத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) இலங்கையின் காப்புரிமைச் சட்டத்தின் கீழ், **சுரேஷின் மனைவிக்கு** இருக்கின்ற சட்ட உரிமைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் இரண்டு (02) நோக்கங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

"பங்குடமையின் உருவாக்கம் என்பது வணிகச் சட்டங்கள் அனைத்திலும் அடிக்கடி உச்சரிக்கப்படக்கூடிய கேள்வியாக இருப்பினும் அது சிறிய நவீன கோட்பாட்டு ரீதியான கவனத்தைப் பெற்றிருக்கிறது. இதன் காரணமாக, பங்குடமை உருவாக்கப் பிரச்சினைகளின் வழங்கமான பகுப்பாய்வு ஒப்பீட்டளவில் ஆராயப்படாத எண்ணக்கருக்களின் அனுமானங்களால் ஆளப்படுகிறது.

*பேயர்ன்.எஸ். (2015). பங்குடமை உருவாக்கச் சட்டத்திலுள்ள மூன்று பிரச்சினைகள் (மற்றும் இரண்டு தீர்வுகள்) U. Mich. JL Reform, 49, 605. at p605.*

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின்படி, பங்குடமை ஒன்றில் இனங்காணத்தக்க மூன்று (03) கூறுகளை (elements) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பங்குடமை ஒன்றிலுள்ள பங்காளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நான்கு (04) உட்கிடையான அதிகாரங்களை (implied authorities) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**சரத்** என்பவர் கோழிப் பண்ணை ஒன்றின் உரிமையாளராக இருப்பதுடன் முட்டைகளை மொத்தமாக விற்பனை செய்யும் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளார். அவர் தனது வியாபாரத்தை இலாபத்தில் நடத்திச் செல்வதற்கும் முகாமை செய்வதற்கும் **கபில** என்பவருக்கு அதிகாரம் வழங்கியிருந்தார். அவர்களுக்கிடையிலான ஒப்பந்த ஆவணத்தின் ஒரு பகுதியாக, எந்தவொரு சூழ்நிலையிலும் முட்டை ஒன்றை ரூபா 55/- விலையை விடக் குறைவான விலையில் விற்பனை செய்யக்கூடாது என **கபில** அறிவுறுத்தப்பட்டுள்ளார். ஒப்பந்த ஆவணத்தில், அவசரகால கோழித் தீவன வழங்கல்கள் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும், கோழித் தீவனங்களுக்கு திடீரென தட்டுப்பாடு ஏற்பட்டதால், **மொஹமட்** என்பவரிடமிருந்து **கபில** கோழித் தீவனத்தை கடனடிப்படையில் வாங்கியிருந்தார். இதற்கிடையில், ஒவ்வொன்றும் ரூபா 52/- விலையில் **ராஜா** என்பவருக்கு 1,000 முட்டைகளை **கபில** விற்பனை செய்திருந்தார். பெரும்பாலான முட்டைகள் நல்ல தரத்தில் இல்லை என்பதை **ராஜா** பின்னர் அறிந்து கொண்டார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **சரத்** மற்றும் **கபில** ஆகியோருக்கிடையிலான முகவராண்மைத் தொடர்பின் தன்மையை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **மொஹமட்** இடமிருந்து **கபில** கடன் அடிப்படையில் வாங்கிய கோழித் தீவனத்திற்கு பணம் கொடுப்பதற்கான பொறுப்பு **சரத்** இற்கு உள்ளதா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **ராஜா, சரத்திடம்** நட்டஈட்டைக் கோர முடியுமா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

(A) **அப்சரா** என்பவர் அவரது சொந்த இடமான பதுளையில் **வரையறுக்கப்பட்ட AAA கம்பனி** என்ற பெயரில் வணிகம் ஒன்றை நடத்திச் செல்கிறார். அவரது கம்பனி பூர்வீகமான இலங்கை மஞ்சளைப் பயன்படுத்தி உடம்புக்குப் பூசக்கூடிய "மஞ்சள் கிறீம்" என்ற பெயரில் அழகுக் கிறீம் ஒன்றினைத் தயாரிக்கிறது. **அப்சரா** சனவரி 08 ஆந் திகதி, ஹொரணை என்ற இடத்தில் வசிக்கின்ற மஞ்சளை வழங்குகின்ற ஒரு வழங்குநரான **ஹகதுடுவ** என்பவரைத் தொடர்புகொண்டு, கிலோகிராமொன்று ரூபா 5,000/- விலையில் 500 கிலோகிராம் இலங்கை மஞ்சளை வழங்குவதற்கான கொடைமுனைவு ஒன்றினைச் செய்திருந்தார். பதுளையில் உள்ள **அப்சராவின்** அலுவலகத்திற்கு முகவரியிடப்பட்டு, அஞ்சலிடப்படும் கடிதத்தின் மூலம் இந்தக் கொடைமுனைவை அவர் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். சனவரி 10 ஆந் திகதி காலையில், சொல்லப்பட்ட விலையில் சொல்லப்பட்ட அளவு மஞ்சளை வழங்குவதற்கு தான் தயாராக உள்ளதாகத் தெரிவித்து, **கஹதுடுவ அப்சராவுக்கு** கடிதமொன்றை அஞ்சலில் இட்டுள்ளார். இந்தக் கடிதம் சனவரி 13 ஆந் திகதி **அப்சராவின்** அலுவலகத்திற்குக் கிடைத்திருந்தது. இதற்கிடையில், மற்றுமொரு மஞ்சள் வழங்குநரான **அலி** என்பவர் **அப்சராவின்** கொடைமுனைவு பற்றிக் கேள்விப்பட்டு, அந்தக் கொடைமுனைவை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தார். சனவரி 10 ஆந் திகதி மாலையில், **அலி அப்சராவைச்** சந்தித்தார். அப்போது 500 கிலோகிராம் மஞ்சளை, கிலோகிராமொன்று ரூபா 4,500/- விலையில் வழங்குவதற்கு **அலி** இணங்கிக் கொண்டதற்கமைய அதற்கான ஒப்பந்தத்தை **அப்சரா அலிக்கு** வழங்கினார். **அப்சரா** கோரிய அளவு மஞ்சளை **அப்சராவின்** அலுவலகத்தில் **அலி** இறக்கினார். **அப்சரா அலியுடன்** செய்துகொண்ட ஒப்பந்தத்தை வெளிப்படுத்தி, **கஹதுடுவவின்** மஞ்சளை நிராகரித்தார். **கஹதுடுவ** தற்போது **அப்சராவுக்கு** எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் திட்டமிடுகிறார்.

சமீபத்தில், **அப்சரா** தனது உற்பத்திப் பொருளான "மஞ்சள் கிறீம்" இலிருந்து எடுக்கப்படும் சாற்றினை ஒரு ஓவிய நிறமாகப் பயன்படுத்தலாம் என்பதை கண்டுபிடித்திருந்ததுடன் அவர் இந்த உப தயாரிப்புப் பொருளுக்கு ***"மஞ்சள் ஆலேபா"*** எனப் பெயரிட்டிருந்தார். **அப்சரா** இந்த உப தயாரிப்புப் பொருள் பற்றி கீழ்வருமாறு பத்திரிகையில் விளம்பரப்படுத்தியிருந்தார்.

*"**மஞ்சள் ஆலேபா** இனை பயன்படுத்துவதன் மீது நட்டஈடு கோரும் எந்தவொரு நபருக்கும் **அப்சராவால்** ரூபா 100,000/- வெகுமதி அளிக்கப்படும். தயவுசெய்து தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்."*

**சித்தாரா குருனான்சே** என்பவர் சுவரோவியங்களைப் பாதுகாக்கும் ஒரு ஓவியர் ஆவார். அவர் சமீபத்தில் கண்டியிலுள்ள ஒரு கோவிலில் காணப்படும் புராதன சுவரோவியங்களைப் பாதுகாப்பதற்கான விலைமனுக் கோரலில் வெற்றி பெற்றிருந்தார். அவர் **வரையறுக்கப்பட்ட AAA கம்பனியிடமிருந்து** *மஞ்சள் ஆலேபா* இனை வாங்கியதுடன் **வரையறுக்கப்பட்ட AAA கம்பனியினால்** வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்டதற்கு இணங்க, கோயிலின் சுவரோவிய வேலைகளுக்கு அதனைப் பயன்படுத்தியிருந்தார். நிறம் பிரயோகிக்கப்பட்டதன் பின்னர், ஒரு வார காலத்தினுள்ளேயே புராதன சுவரோவியங்கள் முற்றாக அழிவடைந்தன.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **அப்சராவின்** தொலைபேசி அழைப்பு, **கஹதுடுவவுக்கான** ஒரு வலிதான கொடைமுனைவை (valid offer) உண்டாக்குமா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) **கஹதுடுவ அப்சராவுக்கு** எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(c) **சித்தாரா குருனான்சே அப்சராவுக்கு** எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(B) இலங்கையில் நிலவும் வழமைக்கு மாறான முட்டையின் விலையேற்றத்திற்கு ஒரு தீர்வாக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. **வரையறுக்கப்பட்ட உத்தர – பித்தர கம்பனி (UB)** இலங்கையில் புகழ்பெற்ற முட்டைகள் மொத்த விற்பனைக் கம்பனியாகும். இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை விநியோகிக்கின்ற சிறப்பங்காடியான **K-Super** இடமிருந்து முட்டைகளுக்கான ஓடர் (கட்டளை) ஒன்றை **UB** பெற்றிருந்தது. ஓடர் செய்வதற்கு முன்னர் **K-Super** இன் முகாமையாளர் **UB** இனுடைய களஞ்சியசாலைக்கு விஜயம் செய்து, இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் மாதிரியைப் பரிசீலித்திருந்தார். பின்னர், **UB** ஆனது "இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை" என்ற விபரத்துடன் தனது சொந்த இருப்பிலிருந்த 10,000 முட்டைகளை மொத்த வழங்கலாக **K-Super** இற்கு விநியோகித்தது. ஒப்புக் கொண்டவாறு 10,000 முட்டைகளையும் விநியோகித்ததன் பின்னர், **K-Super** இன் களஞ்சியப் பொறுப்பாளர் அதில் 6,000 முட்டைகள் மாத்திரமே காட்டப்பட்ட மாதிரியை ஒத்திருந்தது எனவும் ஏனைய முட்டைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதையும் கண்டறிந்தார்.

**K-Super** ஆனது தற்போது **UB** இற்கு எதிராக சேதத்திற்கான சட்ட நடவடிக்கையை எடுப்பதற்குத் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **K-Super** ஆனது **UB** இடமிருந்து சேதத்திற்கான நட்டஈட்டைக் கோர முடியுமா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) விற்பனையாளருக்கும் கொள்வனவாளருக்குமிடையே நிச்சயிக்கப்பட்ட பொருள்களின் சொத்துரிமையை மாற்றுவது தொடர்பான இரண்டு (02) விதிகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |